<u>முதல் கூடுதல் மாவட்ட நீதிமன்றம், ஈரோடு, ஈரோடு மாவட்டம்</u>

முன்னிலை:- திருமதி.எஸ்.எழில், எம்.எல்.,

முதல் கூடுதல் மாவட்ட நீதிபதி,

2026 ம் வருடம் ஏப்ரல் மாதம் 09 ம்நாள் திங்கட்கிழமை

(திருவள்ளுவராண்டு 2057-ஸ்ரீ விசுவாவசு வருடம்-பங்குனி திங்கள் 26 ம்நாள்)

<u>இடைநிலை மனு எண்.7/2025</u>
மே.மு.வ.எண்.124/2018

1. எம்.தங்கமுத்து
2. எஸ்.தமிழரசு
3. எஸ்.பொன்னுசாமி
4. பி.கோபால கிருஷ்ணன்
5. சி.சிவகுமார்
6. ஆர்.மோகனபிரியா
7. ஆர்.சுகன்யா .. மனுதாரர்கள்/ மேல்முறையீட்டாளர்கள்

// எதிர் //

1. ஆயிஷா பீவி (இறந்துவிட்டார்)
2. மும்தாஜ்
3. பாத்திமா மரியம்
4. மெக்ரோஜ் நிஷா
5. காஜா மொகைதீன்
6. ரெஜியா
7. எஸ்.ஏ.முகமது அப்பாஸ்
8. டி.கௌரி சங்கர்
9. டி.சிவகாமி
10. திருமால் முருகன்
11. காயத்திரி
12. வி.எஸ்.பொன்னுசாமி
13. வி.எஸ்.சின்னசாமி
14. அன்னக்கொடி

.. எதிர்மனுதாரர்கள்/
எதிர்மேல்முறையீட்டாளர்கள்

25.11.2025 தேதியிட்ட இம்மனு உ.வி.மு.ச. கட்டளை 41, விதி 27 மற்றும் பிரிவு 151 ன்படி மனுதாரர்களால் தாக்கல் செய்யப்பட்டு, மனுவுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்களை தாக்கல் செய்வதில் ஏற்பட்ட காலதாமதத்தை மன்னித்து மேற்படி ஆவணங்களை மனுதாரர்கள் தரப்பு கூடுதல் ஆவணங்களாக ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று கோரப்பட்டுள்ளது.

இம்மனு இந்நீதிமன்றத்தின் முன்பாக இன்று இறுதியாக விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு, மனுதாரர்கள் தரப்பில் திரு.சி.தேவராஜன், வழக்கறிஞர் அவர்களும், 1, 5, 7 எதிர்மனுதாரர்கள் தரப்பில் திரு.ஏ.சண்முகசுந்தரம், வழக்கறிஞர் அவர்களும் ஆஜராகியும், 2 முதல் 4, 6, 8 முதல் 14 எதிர்மனுதாரர்கள் நீதிமன்றத்தில் அழைக்கப்பட்டு ஆஜரின்மையால் தோன்றா தரப்பினர்களாக்கப்பட்டும், இருதரப்பு தரப்பு வாதுரைகளைக் கேட்டும், இதுநாள்வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து மனு கோப்பைப் பரிசீலனை செய்து, இன்று இந்நீதிமன்றம் வழங்கும்:

<u>உத்தரவு</u>

மனுவுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்களை தாக்கல் செய்வதில் ஏற்பட்ட காலதாமதத்தை மன்னித்து மேற்படி ஆவணங்களை மனுதாரர்கள் தரப்பு கூடுதல் ஆவணங்களாக ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று கோரி மனுதாரர்களால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. <u>மனு உரையின் சுருக்கம்</u>

மனுதாரர் வழக்கில் 1ம் மேல்முறையீட்டாளர். அ.வ.எண்.303/2011ல் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பின் பேரில் இந்த மேல்முறையீடு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. தாவாச் சொத்து அப்துல் கனிக்கு பாத்தியப்பட்டதில் வா.சா.ஆ.1ன்படி அப்துல் கனியிடமிருந்து மனுதாரர் 27.04.1993 தேதியில் கிரயம் பெற்றுள்ளார். மேற்படி சொத்து கேரளாவில் உள்ளது. அப்துல் கனிக்கு கேளராவில் வேறு சொத்துக்கள் இல்லை. பாலக்காடு மாவட்டம் ஆளந்தூர் தாலுக்கா, ஆளந்தூர் சார்பதிவு மாவட்டம், சூலனூர் க.ச.எண்.127/11 ஏ-வில் 2 செண்ட் நிலத்தை குறிப்பிட்ட செக்குபந்தி கண்டு ஆளந்தூர் சார் பதிவாளர் அலுவலக ஆவண எண்.1156/1993ன்படி மேற்படி அப்துல் கனி கிரயம் பெற்றுள்ளார். ஆகவே, கேரளாவில் உளள சொத்தின் உரிமை அப்துல் கனிக்கு உள்ளது. யார் பெயரில் சொத்து உள்ளதோ அவரே சொத்தின் முழு உரிமையளார் ஆவார். கிரயப் பத்திரம் அப்துல் கனி பெயரில் உள்ளதால் மேற்ப சொத்துக்கு அப்துல் கனி முழு உரிமையாளர் ஆவார். மனுதாரர் தரப்பு வழக்கை நிரூபிக்க மேற்படி கிரயப்பத்திரத்தின் அசல் மற்றும் வில்லங்கச் சான்றிதழை தாக்கல் செய்ய வேண்டியது அவசியமாகிறது. அசல் வழக்கு விசாரணையின்போது தாக்கல் செய்யாதது வேண்டுமென்றே ஏற்படவில்லை. எனவே, இந்த மனுவுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள 27.04.1993 தேதியிட்ட அசல் கிரயப் பத்திரம் மற்றும் வில்லங்கச் சான்றிதழை தாக்கல் செய்வதில் ஏற்பட்ட காலதாமதத்தை

மன்னித்து மேற்படி ஆவணங்களை மனுதாரர் தரப்பு கூடுதல் ஆவணங்களாக ஏற்றுக் கொள்ள வேண்டும். இல்லாவிட்டால், மனுதாரருக்கு ஈடு செய்ய முடியாத பெருத்த கஷ்ட நஷ்டம் ஏற்பட்டுவிடும். எனவே, மனுவை அனுமதிக்க வேண்டும்.

3. எதிர்மனுதாரர் தரப்பில் இந்த மனுவிற்கு ஆட்சேபணை இல்லை என்றும், மேற்படி மனுவை அனுமதிக்கலாம் என்றும் மேற்குறிப்பு செய்யப்பட்டுள்ளது.

4. இந்த மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினை யாதெனில், இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதே ஆகும்.

5. பிரச்சினைக்குத் தீர்வு

வழக்காவணங்களைப் பரிசீலனை செய்கையில், அப்துல் கனி கிரயம் பெற்ற 27.04.1993 தேதியிட்ட அசல் கிரயப் பத்திரம் அசல் வழக்கில் தாக்கல் செய்யப்பட -வில்லை. அதற்கான வில்லங்கச் சான்றிதழும் தாக்கல் செய்யப்படவில்லை என்பதால் மேற்படி ஆவணங்களை தற்போது மேல்முறையீட்டில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி ஆவணங்கள் அசல் ஆவணங்களாக உள்ள நிலையில், மேற்படி ஆவணங்கள் அசல் வழக்கிற்கு அவசியமான ஆவணங்கள் என்பதால், இந்த மனுவுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள 27.04.1993 தேதியிட்ட அப்துல் கனி பெயரில் உள்ள அசல் கிரயப் பத்திரம் மற்றும் வில்லங்கச் சான்றிதழ் ஆகியவற்றை மனுதாரர் தரப்பு கூடுதல் ஆவணங்களாக ஏற்றுக் கொள்ளலாம் என்று இந்நீதிமன்றம் முடிவு செய்து இந்த மனுவை அனுமதிப்பதென இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண்கிறது.

**இறுதியாக**, இம்மனுவை அனுமதித்து இம்மனுவுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள இரண்டு ஆவணங்களை மேல்முறையீட்டாளர்கள்/வாதிகள் தரப்பு வா.சா.ஆ.15 மற்றும் 16 ஆக குறியீடு செய்து உத்தரவிடப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

இவ்வுத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு ஒலிவடிவில் சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்டு, இன்று 2026 ம் வருடம் ஏப்ரல் மாதம் 9 ம்நாள் அவையறிய திறந்த இந்நீதிமன்றத்தில் பகரப்பட்டது.

S EZHIL
Digitally signed by S EZHIL
Date: 2026.04.09 19:12:32 +0530

முதல் கூடுதல் மாவட்ட நீதிபதி,
ஈரோடு

சாட்சிய சான்றாவணப் பட்டியல்
(..இருதரப்பில் தாக்கல் இல்லை ..)

S EZHIL
Digitally signed by S EZHIL
Date: 2026.04.09 19:12:38 +0530

மு.கூ.மா.நீ., ஈரோடு.

அசல்/வரைவு உத்தரவு
இ.ம.எண்.7/2025
மே.மு.வ.எண்.124/2018
நாள் 09.04.2026
மு..கூ.மா.நீ.ம., ஈரோடு.